# திருமலைத்தீபம்
## THIRUMALAI THEEPAM


எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 15
விலை 20/=

சித்திரை இதழ்~2015 ,ஆரம்பம் 15 மாசி~2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம்~15
E-mail- catetcota@gmail.com
T.P- 026 2221022, 0263202532

# Happy Easter



## மறை மாநில ஆயரின் செய்தி

தவக்காலம் தனிப்பெரும் காலமாக நகர்ந்து கொண்டிருக்கும் போது இக்காலத்தின் இன்னும் சிறப்பு நிகழ்வுகளான பரிசுத்த வாரம், உயிர்ப்பின் நாட்களை உள்வாங்க இறைவனுக்கு ஏற்றவிதத்தில் இவை செயற்பட இறையருளை வேண்டி நிற்போம். நமது நாட்டினை நோக்கும் போது அண்மையில் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பல கூட்டு ஒப்பந்தங்களில் கைசாத்திட்டதோடு இலங்கை ஜனாதிபதி, பிரதமர் போன்ற முக்கியஸ்தர்களையும் சந்தித்து உரையாடி பல நல்ல ஆலோசனைகளையும் சந்தேகத்திற்கிடமற்ற விதத்திலே தெளிவாகக் கூறியிருந்தார்.

மேலும் கலாச்சார ரீதியாகவும் சமய, பொருளாதார, ரீதியாகவும் இந்தியாவின் ஒத்துழைப்பையும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான நல்ல பல செய்திகளையும் கூறியதோடு முக்கியமாக இரு நாட்டினதும் நட்புறவானது சகல வழிகளிலும் வளர்ந்துவர வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி நின்றார். வட பகுதி மக்களின் பிரச்சனைகளை நன்குணர்ந்த நிலையில் சமாதானம் நல்லிணக்கம் போன்றவற்றிற்கு இதுவே தகுந்த காலம் என்பதையும் வலியுறுத் தியதோடு அனைத்து மக்களும் சமத்துவம், சகோதரத்துவம், நீதி, கௌரவம் போன்றவற்றைப் பேணுவதற்கு சந்தர்ப்பமும் விட்டுக்கொடுப்பும் அவசியமென்பதைச் சுட்டிக் காட்டினார்.

அதேவேளையில் இன்றைய அரசியலில் பல மாற்றங்கள் ஏதேதோ பேசப்படுகின்றன. கடந்த கால ஆட்சியில் உண்டான மோசடிகள் போன்றவையும் வெளிக்கொணரப்பட்டுக் கொண்டும் இருக்கின்றன. ஆனால் புதிய ஆட்சியால் அனைத்து மக்களும் ஒரே நாடாகவும் ஒரே மக்களாகவும் உணரப்பட புதிய ஆட்சியானது வழிசமைக்கும் என எதிர்பார்க்கின்றோம். அதற்காக இறைவனைப் பிரார்த்திப்போம்.

மேலும் நமது தவக்காலத்தினை நோக்கிப்பார்ப்போம் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி பாவ வழிகளை விட்டகன்று செப தவ தான தர்மங்களால் நமது வாழ்வை வளப்படுத்துவதோடு இறை உறவிலே பலமடைவோம். 29ம் திகதி குருத்தோலை ஞாயிறு 30ம் திகதி திங்கள் திருத்தைல திருப்பலி இடம் பெற உள்ளது. குருக்கள் தங்கள் குருத்துவப்பணியின் வாக்குறுதியை புதுப்பிப்பார்கள் அனைத்து மக்களையும் தங்கள் குருக்களுக்காக செபிக்கும் படி கேட்கிறேன்.

இறுதியாக 1கொரி 15:14ல் தூய பவுலடிகளார் கூறுவதுபோன்று **"கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசமும் பொருளற்றதாகும்."** எனவே இவைகளை மனதிற்கொண்டு இத்தவக்காலத்தினை பயனுள்ளதாக்கி பலனடைவோமெனக் கூறி அனைவருக்கும் உயிர்த்த ஆண்டவரின் ஆசி கூறுகின்றேன். உயிர்த்த இயேசு உங்கள் அனைவருக்கும் நிறைந்த ஆசீரை அருள்வாராக.

அதி.வந்.கலாநிதி.யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை
திருமலை மறை மாநில ஆயர்

## திருகோணமலை மறைமாவட்டத்தின் வருடாந்த மாபெரும் சிலுவைப்பாதையும் கல்வாரிப்பலியும் - 2015




## வரவேற்கின்றோம் வாழ்த்துகின்றோம்



மேற்படிப்பிற்காக உரோமிற்கு சென்ற அருட்பணி அ.றொகான் பேணாட் அவர்கள் மீண்டும் எமது மறைமாவட்டத்திற்கு திரும்பியுள்ளார் அவரை வரவேற்கின்றேம் வாழ்த்துகின்றோம் மேலும் அவரது பணிவாழ்வு சிறப்புற செபிப்போம்.

## நுழைவாயில் புத்தக வெளியீடு






தொடர்ச்சி 4ம் பக்கம்

## "மறக்கப்பட்ட மகான்" புத்தக வெளியீடு






தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

மீண்டும் உங்களுடன் பேச எனக்கு ஒரு வாய்ப்பு, மகிழ்ச்சியே மூன்றாவது மாதம் விபூதியோடு தவக்காலத்தை தொடர்கின்றோம். மாதத்தின் இறுதி ஞாயிறிலே "ஆண்டவர் பெயரால் வருகின்றவர் போற்றப் பெறுக" என்று கூறி குருத்தோலை ஞாயிறைக் கொண்டாட உள்ளோம்.

தவக்காலத்தின் ஒவ்வொரு நாளும் நமக்குப் பல உண்மைகளைக் கூறி நிற்கின்றன. கோவிலை வியாபாரக் கூடாரமாக்கி மாசு படுத்தியோரை அமைதியாக அல்ல ஆரவாரித்து அடித்து விரட்டியதைப் பார்க்கின்றோம் ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு என்று கூறிய அதே இயேசு இவ்விதமாக கடினத்தைக் காட்டுவது நியாயத்தை நிலை நிறுத்த வேண்டும் என்பதற்காகவே தான்.

இன்னும் தவக்காலத்தின் அன்றாட நிகழ்வுகள் நம்மை இட்டுச் செல்லும் வழிகளை நோக்கிப் பார்க்க வேண்டும். நமது வார்த்தைகளால், நமது செயல்களால் நம்மோடு வாழும் நண்பர்களையோ உறவுகளையோ, பெரியவர்களையோ துன்பத்துக்குள்ளாக்கி இருந்தால் அவர்களுக்காக நாம் மனம் வருந்துவது மட்டுமல்ல சம்பந்தப்பட்டர்களிடம் மன்னிப்பை வேண்டுவதோடு உறவுகளையும் வலுப்படுத்திக் கொள்வது இத் தவக்காலத்தின் தேவையாகும்.

வாழ்த்துவதும் வீழ்த்துவதும் மனித வாழ்வோடு இணைந்துவிட்ட தொடராக உள்ளன உதாரணமாக குருத் தோலை ஞாயிறிலே நாம் சிந்திப்பது இயேசு ஜெருசலேமில் நுழைகின்ற போது மக்கள் குருத்தோலைகளை கைகளில் ஏந்தியவர்களாய் ஓசான்னா தாவீதின் புதல்வா என்று வெற்றிக்களிப்போடு வாழ்த்தி ஆர்ப்பரிக்கின்றார்கள். இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட பின்னர் சீடரின் "அறியேன்" என்ற மறுதலிப்பும், "ஒழிக ஒழிக" என்னும் முரண்பட்ட ஒலியும் வேதனையின் வடிவங்களை மேலும் பெரிதுபடுத்திக் கொண்டிருப்பதை நாம் எமது சிந்தனைகளில் கொள்ள வேண்டும். இவைகளையே மனித மனங்களின் நிலைகளாக உள்ளன பணத்திற்காக அன்பான உறவையும் மறந்து காட்டிக் கொடுத்துவிட்ட யூதாஸ் இன்னும் மேலாக அன்பு காட்டப்பட்ட பேதுறு "இயசுவை அறியேன்" என்று மறுதலித்துவிட்ட சோக வடிவங்கள் இன்னும் மனித வாழ்வைவிட்டு மறந்து விடாமல் மனிதத்துக்குள் நிலைகொண்டிருப்பது மிகவும் வேதனைக் குரியதாகும்.

இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவி கீழ்படிதலைக் காட்டுகிறார். அடிமையின் தன்மையைப் பூண்டு எடுத்துக் காட்டான வாழ்வினை வாழ்ந்து காட்டியவர்.

இத்தவக்காலத்திலே மாற்றி அமைக்கப்பட வேண்டிய வாழ்க்கை முறைகள் நிறைந்து கிடக்கின்றன. நமக்குள் நாம் தேட வேண்டும். இறைவார்த்தைகளுக்கு முரண்பட்ட நிலைகளிலே நமது வாழ்க்கைப் பயணம் சென்று கொண்டிருந்தால் அவைகளை இனங்கண்டு மாற்றி அமைத்து இறைவனின் பாதையிலே நமது வாழ்வைப் புதுப்பித்து நடக்கின்ற போது நிச்சயமாக நமது வாழ்வு ஆண்டவரின் பாடுகளால் நிறைந்த வெற்றி கண்டதென நாம் உணர்ந்து கொள்வோம்.

இத்தவக்காலமானது நம் அனைவருக்கும் இறை அருள்மிக்க காலமாகவும் இறை ஞானத்திலே சிறந்து அருள்வளங்களால் பெருகி நம்பிக்கைக்குரிய நல்ல பயணாளிகளாக நாம் துலங்கி இறை ஆசீரைப் பெறுவோம் எனக் கூறிக்கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் என கூறி நிற்கின்றேன்

## பிள்ளைகளே நீங்கள் கத்தோலிக்க செயல்பாடுகளின் படி நடக்க 4 குறிப்புக்கள்



01. ஒருபோதும் கைவிடாதீர்கள், உங்கள் பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள், பாடசாலை, மறைக்கல்வி ஆகியவற்றில் நீங்கள் இணைந்து உங்களைகட்டியெழுப்புங்கள். இயேசு உங்களுக்கு போதித்துள்ள வழிமுறை.
02. மிகவும் ஏழைகள் மற்றும் தேவைகளில் உள்ளோரின் மட்டில் அக்கறை காட்டுங்கள்.
03. திருச்சபையை, குருக்களை அன்பு செய்யுங்கள். கிறிஸ்தவ சமூகப் பணிகளுக்கு உங்களை அர்ப்பணியுங்கள்.
04. குழந்தைகள், சமாதானம் மற்றும் அமைதியின் அப்போஸ்தலராக தங்களின் குடும்பங்களுடனும், தங்கள் வாழ்வுடன் தொடர்புடைய அனைவருடனும் இருக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தந்தை 1ம் பிரான்சிஸ்

## திருவிவிலியமும் வழிகாட்டலும்

அருட்பணி சீ.றோ.ஜெயரெத்தினம்




எம்மிலே பலர் திருவிவிலியத்தின் வழிகாட்டல் மூலமாக வாழ்வில் பல முக்கிய தீர்மானங்களை எடுக்கத் தம்மையே பழக்கப்படுத்தியுள்ளனர். எனினும் விவிலிய வசனங்களுடாக இறைவனின் சித்தத்தை அறிந்து கொள்ள அதனை வாசிக்க வேண்டும். அதுவும் ஆழமாக வாசிக்க வேண்டும். அதனைத் தியானிக்க வேண்டும். இறைவனோடு அந்த வசனங்களுடாகப் பேச வேண்டும்.

எனினும் பலர் மூடத்தனமான நம்பிக்கைகள் மூலம் விவிலிய வசனங்களைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். கவலைக்குரிய விடயங்கள் இன்றும் நடந்து கொண்டே இருக்கின்றன். காலையில் எழுந்தவுடன் பலர் கண்களை மூடி விவிலியத்தைத் திறந்து, ஏதாவது ஒரு இடத்தைத் தொட்டு, அங்கே என்ன வசனம் இருக்கின்றதோ, அது அன்றைய நாளுக்குரிய வழிகாட்டல் என ஏற்றுக் கொண்டு அதனை வாசித்துக் கொள்கின்றனர்.

அவர்களுக்கு ஒரு குட்டிக் கதை இதோ – ஒருவர் தன் மகனுக்கு மணமகள் பார்த்து, அந்த வீட்டுக்குத் திருமணம் நிச்சயிக்கப் போக ஆயத்தமானார். போகமுன் கடவுளின் சித்தம் என்னவென்று அறியக் கண்களை மூடி விவிலியத்தைத் திறந்து ஒரு பகுதியைத் தொட்டுக் கண்களைத் திறந்து பார்த்தார். அதில் இவ்வாறு இருந்தது. – **"யூதாஸ் நாண்டு கொண்டு இறந்தான்"** (மத்.27/ 5 ) அதிர்ச்சியடைந்த அவர் தன் மனதுக்குள் இவ்வாறு நினைத்தார். **"பரவாயில்லை, இன்னொரு முறை செய்து பார்ப்போம்."** மீண்டும் இன்னொரு பக்கத்தைத் திறந்து அதிலே ஒரு இடத்தை தொட்டார். அதிலே இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. **"நீரும் போய் அவ்வாறே செய்யும்"(லூக். 10/ 37)** மீண்டும் அதிர்ச்சியுற்றவராய், **"கடைசியாக ஒருமுறை முயற்சிப்போம்"** என அவர் வேறொரு இடம் தேடித் தொட்டுப் பார்த்தார். அதில் இவ்வாறு இருந்தது.- **"செய்ய வேண்டியதை விரைவாகச் செய்யும்." (யோவா 13/ 27)** அவரது பெண் பார்க்கும் படலம் எவ்வாறு முடிந்து இருக்கும் என எம்மால் கற்பனை செய்ய முடியும். விவிலியத்தைப் புரட்டுங்கள்.ஒரு பகுதியை ஆழமாக வாசியுங்கள். மௌனமாகத் தியானியுங்கள். அமைதியில் அவர் உங்கள் உள்ளத்தோடு பேசுவதைக் கேட்பீர்கள். "அமைதி கொண்டு, நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள்.! **Be still and know that I am God. (தி.பா. 46 10)** அமைதியில் இறைவார்த்தையூடாக இறைவனைத் தேடுவோம்!

## திருப்பாலத்துவ பாடல்கள் இறுவெட்டு வெளியீடு



**திருப்பாலத்துவ சபை சிறுவர்களே ஊக்குவிப்பாளர்களே !**

திருப்பாலத்துவ பாடல் இறுவெட்டில் (CD) உங்கள் கைவண்ணத்தில் உருவான பாடல்களும் இடம் பெற வேண்டுமா? உங்கள் ஊக்குவிப்பாளர்களோடு இணைந்து திருப்பாலத்துவ சபை தொடர்பான கருத்துக்கள் அடங்கிய பாடல்களை எழுதி கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். தரமான பாடல்கள் நடுவர்களாள் தெரிவு செய்யப்பட்டு உங்களது பெயர்களின் உள்ளடக்கத்துடன் இறுவெட்டு (CD) வெளியிடப்படவிருக்கிறது. அத்துடன் சிறந்த குரல்வளம் உள்ள திருப்பாலத்துவ சிறுவர்கள் தங்கள் பெயர் முகவரி தொடர்பிலக்கம் போன்றவைகளை தெளிவாக எழுதி மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனருக்கு அனுப்பி வையுங்கள். **எதிர்வரும் வைகாசி 31ம் திகதிக்கு முன்** பின்வரும் முகவரிக்கு உங்கள் பாடல்களை அனுப்பி வையுங்கள்.

**பாடல்கள் எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**



**அருட்பணி றெஜினோல்ட் சபரமாது**
**தேசிய இயக்குனர்,**
**பாப்பிறை மறைபரப்பு சபைகள்,**
**இல 19, பல்கம் இடம்,**
**கொழும்பு - 08**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணத்தை வென்றி கொண்டாரே

அருட்பணி N.C அருள்வரதன்

மனிதக் கொடுமைகளாலே
மனிதரின் பாவம் போக்க
மனிதனாய் மண்ணிலே தோன்றி
மனிதரால் துன்பங்களேற்றே
மனிதரால் அழிவினைக் கண்டாரே

காறி உமிழ்ந்த கோலங்கள்
பாரமாம் சிலுவையின் ஏற்றங்கள்
சோர்ந்த நிலைகளைக் கண்டுமே
சோகமே கொள்ளாத மனங்களுமாம்
அதைக்கண்டு கலங்கிய கண்களுமாய்
கவலையில் மூழ்கிய பெண்களுமாய்
தொங்கிய நிலையில் சிலுவையிலே
துயரங்கள் தாங்கியே கண்மூடினாரே

நாட்கள் மூன்று நகர்ந்து செல்ல
கல்லறைக் காவலர் ஒருபுறமாய்
காவலாய் நின்ற போதிலுமே
வல்லமை காட்டிய வேளையது
வகுத்த திட்டம் நிறைவேறவே
கல்லறை பிளந்து திறந்துவிடவே
காவலர் ஓடிக் கலைந்திடவே
மரணத்தின் நிலையினை மாற்றிவிட்டே
மரணத்தை உயிர்ப்பினால் வென்றாரே

கொடுமைகள் மறைந்திட வேண்டும்
படுந்துயர் பரிதாப நிலைகளென
கெடுமதிகள் கலைந்தே மறைய வேண்டும்
விடுபட முடியா வேதனைகள்
விளைவித்துக் காட்டிய துயரவடுக்கள்
மறைந்து கலைந்து போய் மண்ணில்
அமைதியின் நிலைகள் பிறந்துவிட்டால்
மரணத்தின் வெற்றியால் மனங்கள் நிறையுமே

## உண்மையின் தத்துவம்

சத்தியத்தை விரும்பினால் நாம்
இறைவனை உணரலாம்.

சுயநலம் உடையவருக்கே இறப்பும்,
பிறப்பும் உண்டு இறைவனுடன்
ஒன்றுபட்டவன் என்றும் சத்தியத்துடன்
வாழ்கின்றான்.

நாம் இறைவனை நம்மில் உணர்ந்தால்
தான் இறைவன் நம்மை ஆசீர்வதித்து
அருள்புரிகின்றார்.

விரும்புவதை பெற முடியாதவன்
கிடைப்பதை விரும்ப வேண்டும்

உயிரோடு வாழ்வது மட்டுமல்ல உயர்ந்த
கொள்கைக்காக மடிவதும் தான்
வாழ்க்கை

உள்ளத்தில் கலக்கம் இருந்தால்
வெளியில் எல்லாமே கலக்கமாக தோன்றும்

வாழ்க்கை என்பது பெயர் தெரியாத
ஊருக்கு வழி

நாம் பேசுவது தங்கம் என்றால்
பேசாதிருப்பது வைரம்

ஜே.ருக்ஷிக்கா
தூய யுவானியர் ஆலயம்
சாம்பல் தீவு

## 'திருத்தூதர்களும் பணிகளும்' எனும் தலைப்பில் கவிதை

திருத்தூதர்கள் திருத்தூதர்கள்
அன்பிலும் நட்பிலும் இயேசுவைப் போன்றவர்கள்
இயேசுவோடு வாழ்ந்தவர்கள்
இயேசுவே என அழைத்து அவருடன் இணைந்தவர்கள்

அவர்கள் பணி சொல்லமுடியாக் காவியம்
அவர்களின் செயல்கள் இயற்கை ஓவியம்
அவர்களது தேடல் இறைவனையே நாடும் தேடும்
உண்மையின் வடிவம் திருத்தூதர்கள்



அன்பின் காவியம்
பண்பின் பண்டிதர்கள்
செயற்பாட்டில் உறுதியானவர்கள்
சொல்லிலும் செயலிலும் இயேசுவைப் போன்றவர்

திருத்தூதர்கள் பணி வளர்க

ஜோர்ச் சேகர் பிரேவினி
புனித அந்தோனியார், ஆலயம்

## அடையாளம்

**"ஆனால் இருப்பவர் யோனாவை விட பெரியவர் அல்லவா" (லூக்கா 11:32)**

அடையாளங்கள் இல்லாமல் வாழ்க்கை இல்லை மனிதர் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொண்டு வாழபல வழிகளையும் கையளிக்கின்றனர். பாஷை, சைகை மூலமாக தொடர்புகள் வைத்திருந்தாலும் இவை அனைத்தும் அடையாளங்களே.

விவிலியத்தில் மக்கள் பல அடையாளங்கள் மூலமாக இறைவனின் செய்தியையும் வழிகாட்டல்களையும் பெற்றனர். இவற்றை புரிந்து வாழ்வு பெற்றவர்களும் உண்டு
1.புரிய மறுத்து தண்டனை பெற்றவர்களும் உண்டு.

நற்செய்தியில் இயேசு அடையாளங்களை குறிப்பிட்டார்.
1.நினிவே நகருக்கு யோனாவின் செய்தி - யோனா நூல் பழைய ஏற்பாட்டில் நான்கு அதிகாரங்களை கொண்டது. யோனா பிற இனத்தவரிடம் சென்று செய்தியை அறிவிக்கின்றார். அவரது எச்சரிக்கையை நினிவே மக்கள் ஏற்று மனம் மாறினார்கள்.
2.தென்னாட்டு அரசி- இவர் பிற இனத்தவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்டு அவரிடம் வருகிறார்.

அடையாளம் யாருக்கு கொடுக்கப்படுகின்றது என்பது முக்கியமல்ல அடையாளத்தைப் பெறுபவர்கள் அது தரும் செய்தியை ஏற்று வாழ்வு பெற வேண்டுமென்பதே முக்கியம்.

மேரி ரொஷானி ரெட்னராசா
இலிங்கநகர் (உவர்மலைப்பங்கு)
திருகோணமலை

### வாசகர்களே!

உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்ப் பார்க்கின்றோம். அவற்றை **திருமலைத் தீபத்திற்கு** அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:** பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :-
ஆசிரியர்
திருமலைத் தீபம்
297, டொக்கியாட் வீதி, திருகோணமலை.

## அறிவித்தல்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவு படுத்துகின்றோம்

**கட்டணம்**

| | | |
|---|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் | - 2500.00 |
| | 1/2 பக்கம் | - 5000.00 |
| கலர் | 1/4பக்கம் | - 3750.00 |
| | 1/2 பக்கம் | - 7500.00 |

## உயிர்ப்பு விழா சிறப்பு கவிதைப் போட்டி

### மரணத்தை வென்றாரே.....

- வரிகளைச் சரியாக வடிவமையுங்கள்.
- சரியாக கவிதை வரிகளை வடிவமைத்தால் பரிசு.
- பலரும் சரியாக வடிவமைத்தால் குலுக்கல் முறையில் தெரிவு இடம் பெறும்.

| | | |
|---|---|---|
| முதலாம் | பரிசு:- | ரூபா 400.00 |
| இரண்டாம் | பரிசு:- | ரூபா 300.00 |
| மூன்றாம் | பரிசு:- | ரூபா 200.00 |

- ஒருவர் மட்டும் சரியாக வடிவமைத்தால் முழுத்தொகையும் அவரையே சேரும்.
- அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 30.04.2015
- அனுப்ப வேண்டிய முகவரி உயிர்ப்பு விழா சிறப்பு கவிதை போட்டி, இல 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.

கல்லறை காத்த காவலரோடியே
காத்திட முடியவில்லை
பெரும் கல்லறை கூடப் பெருமகனுடலை
கல்லறையிலிட்டாலும்
அல்லல்களுற்ற அவருடலங்கே
உடலை வருத்தி உயிரைப் பறித்தே
வல்ல நிலைகளின் வளங்களோங்கவே
அடங்கியே ஒடுங்காமல்
அவர் சொல்லியபடியே மூன்றாம் நாளிலே
வல்லமை கண்டிடவே
மரணத்தை வென்று விட்டாரே



### தவக்கால சிறப்பு கவிதைப் போட்டி முடிவுகள்

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும்.**

**பங்குபற்றியவர்கள் :- 48 பேர்**
**சரியாக வடிவமைத்தவர்கள் ஒருவரும் இல்லை.**

### சரியான கவிதை வடிவம்

**சிலுவையின் சுமைதான் என்ன?**



பாடுகள் நிறைந்த பாதையிலே
பாடுகள் படுகின்ற கோலமது
கேடுகள் நிறைந்தே கூடியோரின்
கெடுமதி நிறைந்த முடிவுகளால்
பொல்லாத நிலைகள் ஒன்றாகியே
பொங்கியே ஒன்றாக எழும்போதங்கு
எல்லைகள் கடந்த துயரினிலே
ஏங்கியே செல்லும் யேசுபிரான்
சொல்லிட முடியாத் துயர்களினால்
சோகங்கள் பெருகிக் கொண்டவராய்
பாரமாம் சிலுவையைத் தோள்மீது
பாவமாய்ச் சுமந்தே செல்கின்றாரே

## சிந்திக்க சிரிக்க......

ஒருவர் : செருப்புக்கும் சீப்புக்கும் இடையே உள்ளவித்தியாசம் என்ன?

மற்றவர்: செருப்பிலே பல் இல்லை ஆனால் கடிக்கும் சீப்புக்கு பல் இருக்கு ஆனால் கடிக்காது.

??????????????????????????????????

குமார் : மச்சான் எலிப் பொறிக்கும் கணிப் பொறிக்கும்உள்ள வித்தியாசம் தெரியுமா?

கமல்: எலிபொறியில் மவுஸ் உள்ளே இருக்கும் கணிப்பொறியில் மவுஸ் வெளியே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தித்திக்கும் திருப்பாடல் 98

அருட்பணி ரி.கிங்ஸ்லி றொபட்

**ஆண்டவர் அனைத்துலகின் நீதிபதி**

1-3: ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்

1. ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்; ஏனெனில், அவர் வியத்தகு செயல்கள் புரிந்துள்ளார். அவருடைய வலக்கரமும் புனிதமிகு புயமும் அவருக்கு வெற்றியை அளித்துள்ளன.
2. ஆண்டவர் தம் மீட்பை அறிவித்தார்; பிற இனத்தார் கண்முன்னே தம் நீதியை வெளிப்படுத்தினார். 3. இஸ்ரயேல் வீட்டாருக்கு வாக்களிக்கப்பட்ட தமது பேரன்பையும் உறுதி மொழியையும் அவர் நினைவு கூர்ந்தார். உலகெங்கு முள அனைவருக்கும் நம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.

4-6: அனைவரும் ஆண்டவரை ஏத்துங்கள்

4. உலகெங்கும் வாழ்வோரே! அனைவரும் ஆண்டவரை ஆர்ப்பரித்துப் பாடுங்கள்! மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்துப் புகழ்ந்தேத்துங்கள்.
5. யாழினை மீட்டி, ஆண்டவரைப் புகழ்ந்தேத்துங்கள்; யாழினை மீட்டி இனிய குரலில் அவரை வாழ்த்திப் பாடுங்கள். 6. ஆண்டவராகிய அரசரின் முன்னே எக்காளம் முழங்கி கொம்பினை ஊதி ஆர்ப்பரித்துப் பாடுங்கள்.

7-9: படைப்புகளே, ஆண்டவரைப் புகழுங்கள்

7. கடலும் அதில் நிறைந்தவையும் உலகும் அதில் உறைபவையும் முழங்கிடுக! 8. ஆறுகளே! கை கொட்டுங்கள்; மலைகளே! ஒன்று கூடுங்கள்;
9. ஆண்டவர் முன்னிலையில் மகிழ்ந்து பாடுங்கள்; ஏனெனில், அவர் உலகுக்கு நீதி வழங்க வருகின்றார்; பூவுலகை நீதியுடன் ஆண்டிடுவார்; மக்களினங்களை நேர்மையுடன் ஆட்சி செய்வார்.

கிறிஸ்துவில் நமக்கு மீட்பளித்து, அம்மீட்பை நம்மில் இன்றும் தொடர்ந்து நடத்திவரும் ஆண்டவருக்குப் **"புதியதொரு பாடல்"** இசைப்போம். நாம் பெற்ற மீட்பின் ஒவ்வொரு வெளிப்பாடும், மேலும் நாம் பெறவிருக்கும் மீட்புக்கொடைகளுக்கு அச்சாரமாகும். எனவே, மகிழ்ச்சி, புகழ், நன்றி, ஆர்ப்பரிப்பு, களிகூர்தல், பூரிப்பு, ஆரவாரம், இன்னிசை, நடனம் முதலியன நம் செபங்களிலே இடம்பெறட்டும்.

**செபிப்போம்:**

இறைவா, உம் வெற்றியை நான் நம்புகிறேன். ஏற்கனவே நீர் வாகை சூடிவிட்டதாக நம்புகிறேன். **"இதோ, நான் உலகை வென்றுவிட்டேன்,"** என்று முன்பே நீர் அறிவித்துவிட்டீர். இந்த அறிவிப்பை நான் நம்புகிறேன். எல்லா ஐயங்களையும் தாக்குதல்களையும் மீறி, இந்த அறிவிப்பை எங்கும் நான் பரப்புவேன். ஆண்டவரே இங்கே நீர் இருப்பதால், உம் வெற்றியும் இங்கே உள்ளது. இத்தரையில் நீர் நடந்தீர். எம் மொழிகளில் பேசினீர். எம்போல் துன்பப்பட்டீர். உம் மீட்பைப் போதித்தீர்; சாதித்தீர், எமக்காகச் சாவைச் சுவைத்தீர்; உயிர்த்தீர். இவற்றை நான் அறிந்து உம்மில் பற்றுறுதியுடன் வாழ துணைசெய்யும்.

**(நன்றி: ஆர். சே. இராசா. யே.ச.)**

தொடரும்...

## உயிர்ப்பு பற்றிய சில அர்த்தமிக்க அடையாளங்கள்



உயிர்ப்பைப் பற்றிய அடையாளங்கள் என்பது காலம் காலமாக கிறிஸ்தவர்களிடையே காணப்படும் அர்த்தமிக்க அடையாளங்களை மையமாகக் கொண்டுள்ளது. உயிர்ப்பைப் பற்றிய சில அடையாளங்களை எல்லாக் கலாச்சாரங்களும் கிறிஸ்தவர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள் எனவே இவற்றை விளக்குவதன் வழியாக உயிர்ப்பின் மேன்மையை உணரலாம். அவற்றில் இரண்டு பற்றி காண்போம்.

**உயிர்ப்பு முட்டை:**

தொடக்க காலத்திலிருந்து மறுபிறப்பின் அடையாளமாகவும் புதிய வாழ்வின் தொடக்கமாகவும் கருதப்பட்டது. நம்பிக்கையாளர்கள் தவக்காலத்தில் முட்டை மற்றும் அசைவ உணவுகளைத் தவிர்ப்பதால் உயிர்ப்புக்காலத்தில் அதிகமாகப் பயன்படுவதில் ஆச்சரியமில்லை தொடக்க கிறீஸ்தவர்கள் முட்டைஎன்பது இயேசுவின் கல்லறையையும் அது உடைபடுவது உயிர்ப்பையும் உணர்த்துவதாக எண்ணுகின்றார்கள்.

**உயிர்ப்பு செம்மறி:**

செம்மறி உயிர்ப்பின் அடையாளம் என்பதில் ஆச்சரியமில்லை ஏனெனில் கிறிஸ்தவர்கள் இயேசுவை **"கடவுளின் செம்மறி"** என்றே பார்க்கிறார்கள். நமது யூத நண்பர்களுக்கு செம்மறியின் இரத்தமும் அதைத் தங்களின் வீடுகளின் நிலைக்கால்களில் தெளித்தலும் கடந்து செல்லல் விழாவின் சிறப்பு ஆகும். ஆகவே சாவின் வானதூதர் அந்த வீடுகளைக் கடந்து செல்வார். கடத்தல் விழா விடுதலையின் வாக்குத்தத்தத்தின் விழாவாகும். இன்றைய கிறிஸ்தவர்கள் இதை மரணத்திலிருந்து விடுதலையாகவும் நிலை வாழ்வுக்கான அனுபவமாகவும் பார்க்கின்றார்கள்.

**இயேசுவின் உயிர்ப்பு - புது வாழ்வின் அடையாளம்**

**இயேசுவின் உயிர்ப்பு - சாவிலிருந்து விடுதலையின் அடையாளம்**

**இயேசுவின் உயிர்ப்பு - வளமான வாழ்க்கையின் அடையாளம்**

நன்றி தோழன்


## பங்குத் தரிசிப்பு 15.03.2015

திருமறைக்கல்வி நடுநிலையத்தின் இவ் வருடத்திற்கான 2வது பங்குத்தரிசிப்பு புதிய பங்கான தூய வனத்து அந்தோனியார் ஆலயம் செல்வநாயகபுரமாகும். அருட்பணி சீ.றோ.ஜெயரெத்தினம் அவர்களும் திருமறைக்கல்வி நடுநிலைய பணியாளர்களும் சென்று மறைக்கல்வி வகுப்புகளை பார்வையிட்டு பின்பு மறையாசிரியர்களுடனும் கலந்துரையாடினோம் தேவைகள்,பிரச்சனைகள் அறிந்து கொண்டோம்.



## "மறக்கப்பட்ட மகான்" புத்தக வெளியீடு

2015 மார்ச் 1ம் திகதி அன்று காலை 08.30மணிக்கு மூதூர் ஞானப்பிரகாசர் மண்டபத்தில் அருட்பணி சீ.றோ.ஜெயரெத்தினம் எழுதிய "மறக்கப்பட்ட மகான்" (அருட்பணி மைக்கல் டி மெல்லோ) வின் வரலாறு நூல் வெளியீடு இடம் பெற்றது. இதற்கு பிரதம அதிதியாக மூதூர் மண்ணின் முதல் குருவும் , திருமறைக்கல்வி நடுநிலைய இயக்குனரும் திருமலைத் தீபம் ஆசிரியருமான அருட்பணி என். சி. அருள்வரதன் அவர்களாவர் மேலும் இந் நிகழ்விற்கு ஆயரின் பிரதிநிதி அருட்பணி கி.நோயல் இம்மானுவேல், அவர்களும் இயேசு சபை அருட்பணி ஜே. அனஸ்ரின் மொறாயஸ் அவர்களும், மூதூர் பங்குத்தந்தை யூஜின் போல் ஜொனத்தன் அவர்களும், திருச்சிலுவை கன்னியர் சபை அருட்சகோதரி லூசியா ஜோசப் அவர்களும், அருட்பணியாளரின் உற்றார் உறவினர், நண்பர்கள் , மூதூர் அப்போஸ்தலிக்க கார்மேல் சபை அருட்சகோதரிகள் மூதூர் இறைமக்கள் வருகை தந்து இந் நூல் வெளியீட்டை சிறப்புறச் செய்தனர். அருட்பணி டி மெல்லோ அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய செய்திகளை தேடிக்கண்டுபிடித்து இப்புத்தக வடிவில் வெளியிட்டு எமக்கு தந்தமைக்கு அருட்பணி சீ.றோ.ஜெயரெத்தினம் அவர்களுக்கு பாராட்டுக்களும் நன்றியும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாநிலச் செய்திகள்

## நன்றியும் வரவேற்பும்

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி எஸ்.ஜெயராஜ் கூஞ்சு அ.ம.தி அவர்கள் மூதூர் இருதயபுரம் திரு இருதயநாதர் ஆலயப் பங்குத் தந்தையாகவும், தி/மூ/திரு இருதய வித்தியாலயத்தில் அதிபராகவும் கடந்த எட்டு (8) வருடங்களாகப் பணியாற்றியவராவார். இவருக்கு எமது நன்றியும் வாழ்த்துக்களும். மேலும் இவர் மன்னாரில் உள்ள Pre.Novices, Pre.Noviate மாணவர்களுக்கு இயக்குனராக சென்றுள்ளார் இவரது பணிவாழ்வு சிறக்க வாழ்த்துகின்றோம் செபிக்கின்றோம். மேலும் பாலையூற்று தூய லூர்து அன்னை ஆலயத்தில் கடந்த ஒருவருடமாக பணியாற்றிய உதவிப்பங்குத்தந்தை அருட்பணி டே.அன்றூ ஸ்ரீபன் அவர்கள் மூதூர் இருதயபுரம் திரு இருதய ஆலயத்திற்கு பங்குத்தந்தையாக 2015 மார்ச் 1ம் திகதி முதல் பொறுப்பேற்றுள்ளார். இவரது பணிவாழ்வு சிறக்க வரவேற்கின்றோம், வாழ்த்துகின்றோம் செபிக்கின்றோம்.

## தூய மரியாள் பேராலய மறை ஆசிரியர்களுக்கான தவக்கால தியானம்

நெறிபடுத்தியவர் :
தவக்காலம் அருளின், இரக்கத்தின், மனமாற்றத்தின் காலம் அருட்பணி ஜே.அனிஸ்டன் மொறாயஸ் இ.ச (இயக்குனர் இயேசு சபை ஆரம்ப நவ கன்னியாசம்) இத் தியானமானது 05.03.2015 தூய திருமுழுக்கு யோவான் ஆலயம், சாம்பல் தீவில் நடைபெற்றது.

## தூய மரியாள் பேராலய கத்தோலிக்க இளைஞர்களுக்கான தவக்கால தியானம்

நெறிப்படுத்தியவர்கள்

**சிலுவையும் மகிமையும்** -அருட்பணி சூ.டக்ளஸ் ஜேம்ஸ் (அதிபர் தூய யோசேவ்வாஸ் சிறிய குருமடம்)

**இளைஞரும் இன்றைய உலகும்** - அருட்பணி சீ.றோ.ஜெயரெத்தினம் (சிங்களப்பிரிவின் பொறுப்பாளர் திருமறைக்கல்வி நடுநிலையம்) இத்தியானமானது 20.03.2015 தூய யாகப்பர் ஆலயம் வெல்வெரியில் நடைபெற்றது.




வாசகர்கள் , அன்பர்கள் , வாடிக்கையாளர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் திருமலைத் தீபத்தின் உயிர்ப்பு விழா நல் வாழ்த்துக்கள்

Happy Easter



## உவர்மலை குழந்தை இயேசு ஆலய 29வது வருடாந்த திருவிழா

உவர்மலை குழந்தை இயேசு ஆலய 29வது வருடாந்த திருவிழாவானது 30.01.2015 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்தோடு பங்குத்தந்தை அருட்பணி ஐ.யூட்சர்வானந்தன் அடிகளினதும் பங்கு மக்களின் சமூகத்துடனும் இனிதே ஆரம்பமானது. ஆலயத் திருவிழாவை முன்னிட்டு புதிதாக பங்கிற்கென Band இசைக்குழு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதனை அருட்பணி வி.ஜோர்ஜ்திசநாயக்க அடிகளாரால் (சீனன்குடா பங்குத்தந்தை) இறை ஆசீருடன் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு திருநாள் நவநாள் காலங்களில் திருப்பலி வாசகருக்கான வாசகர் உடைகளும் அறிமுகப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாசகர் உடை அறிமுகமானது எமது மறைமாவட்டத்தில் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டதும் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகவும் அமையபெற்றிருந்தது. மேலும் 07.02.2015 அன்று மாலை குழந்தை இயேசுவின் திருச்சுருபம் பவனியாக உவர்மலை கிராமத்தினுள் எடுத்துச் செல்லப்பட்டது. அத்தோடு 08.02.2015 அன்று அற்புதக் குழந்தை இயேசுவின் திருநாள் திருப்பலியானது எமது மறைமாவட்டத்தின் ஆயர் அதி.வணக்கத்துக்குரிய கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையின் தலைமையிலும் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ரி.கிங்ஸ்லி றொபட் அடிகள் மற்றும் ஏனைய மறைமாவட்ட குருக்களின் பிரசன்னத்தோடு சிறப்பாக கொண்டாடப்பட்டது. முடிவில் குழந்தை இயேசுவின் திருச்சுருப ஆசீருடனும் திருவிழாவைக் கொண்டாட வந்திருந்த குழந்தை இயேசுவின் பக்தருக்கான காலை உணவுடனும் திருவிழாவானது வெகு விமரிசையாக நிறைவு பெற்றது. மீண்டும் அன்று மாலை மறைமாவட்ட ஆயர் மற்றும் அருட்பணி ப. போல் றொபின்சன் (இறைஇரக்கப் பங்குத்தந்தை) அருட்பணி S.A பொன்சியன் (தி/தூய சூசையப்பர் கல்லூரி அதிபர்) ஆகியோரின் வருகையோடு பங்குத்தந்தையின் நெறிபடுத்தலில் பக்தி சபைகளின் கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டது.

ப.போல்பிரகாஷ்
உபசெயலாளர், பங்கு மேய்ப்புப்பணிச்சபை

## செல்வநாயகபுரம் தூய வனத்து அந்தோனியார் ஆலயப்பங்கின் பணிமனைத் திறப்பு விழா

2015.02.22 அன்று ஞாயிறு திருப்பலியின் பின் தூய வனத்து அந்தோனியார் ஆலயப்பங்குப் பணிமனையை ஆயரின் பிரதிநிதி அருட்பணி கி.நோயல் இம்மானுவேல் அவர்கள் இறைவழிபாட்டை நடாத்தி ஆசீர்வதித்து திறந்து வைத்தார். இதன் ஒரு பகுதியில் தினத் திருப்பலிக்கான சிற்றாலயமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விற்கு அருட்பணியாளர்கள் : போல் றொபின்சன், அன்ருஸ்டிபன், சுதர்சன் உட்பட திருச்சிலுவை கன்னியர் மட அருட்சகோதரிகளும் பங்கு மக்களும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வின் நினைவாக அருட்பணி அன்ரு ஸ்டிபன் அவர்களால் மாமரக்கன்று நடப்பட்டது. அனைத்து நிகழ்வுகளையும் பங்கின் பணியாளர் அருட்பணி S.S. ஜோன்பிள்ளை தலைமை தாங்கி வழிநடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தவக்கால சிந்தனையுடன் கூடிய துதிப்பலி

புனித மரியாள் பேராலயத்தில் மாசி மாதம் 27,28,1ந் திகதிகளில் தவக்கால சிந்தனையுடன் இறை வார்ததைப் பகிர்வும் துதிப்பலியும் சகோதரர் V.N கிஷோக் என்பவரால் இனிதே நடைபெற்றது.

## அருட்பணி டே.அன்ரு ஸ்டிபன் அவர்களின் பணி மாற்றம்

பாலையூற்று லூர்து அன்னை திருத்தலத்தில் கடந்த ஒரு வருடம் உதவிப் பங்குத் தந்தையாக பணியாற்றிய அருட்பணி அன்ரு ஸ்டிபன் அவர்கள் மூதூர் இருதயபுரம் பங்கிற்கு பணியாற்ற செல்கிறார். இதனை முன்னிட்டு 01.03.2015 அன்று காலை மறைக்கல்வி மாணவர்களால் மாலை அணிவித்து திருப்பலியும் சிறப்பிக்கப்பட்டது. திருப்பலியை அருட்பணி அ.றொகான் பேணாட், அருட்பணி செ.மதுராங்கன் குருஸ், அருட்பணி டே.அன்ரு ஸ்டிபன் அவர்களால் நிறைவேற்றிய பின்பு தந்தையவர்கள் ஒருவருட காலமாக பங்கிற்கு ஆற்றிய பணிதனை அல்பமாகவும் வாழ்த்துமடல் மூலமும் நன்றிகள் தெரிவிக்கப்பட்டதுடன் அன்பளிப்புகளும் வழங்கிய பின்பு பங்கு மக்களோடு தந்தை அவர்கள் மூதூர் பங்கிற்கு பிரியாவிடை பெற்றுச் சென்றார்.

## அர்ப்பண வாழ்வின் ஆண்டில் மாபெரும் தவக்கால ஆராதனை

04. 03. 2015 புதன் கிழமை பி.ப 06.00மணி - 10.00மணிவரை தூய லூர்து அன்னை திருத்தலத்தில் மாபெரும் தவக்கால ஆராதனை நடைபெற்றது. இதனை அருட்பணியாளர்களான வி.ஜோர்ஜ் திசநாயக்கா, இ.யூட் சர்வானந்தன், சூ.டக்ளஸ் ஜேம்ஸ், செ.மதுராங்கன் குருஸ், பி.றொபின்சன் போல் ஆகியோர் வழிநடத்தினார்கள். இதனை கத்தோலிக்க அருங்கொடைப்பணியகம் ஒழுங்கமைத்து வழி நடத்தியது.

## வரவேற்கின்றோம்

கொழும்பு மறைமாவட்ட அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி இயேசு ரமேஸ் அ.ம.தி அவர்கள் 2015 பெப்ரவரி 13ம் திகதி முதல் திருகோணமலை மறைமாவட்டத்திலுள்ள குச்சவெளி தூய செபமாலை மாதா பங்கிற்கு பங்குத்தந்தையாக பொறுப்பேற்றுள்ளார். (புடவைக்கட்டு, சலப்பையாறு, புல்மோட்டை, கல்லறாவ) இவர் வெள்ளவத்தை தூய லோறன்ஸ் ஆலயம் மருதானை தூய பற்றிமா ஆலயம், நீர்கொழும்பு டீ மெசனட் ஆங்கில நிறுவனத்தில் பணியாற்றியவராவார். இவரது பணிவாழ்வு சிறக்க வரவேற்கின்றோம், வாழ்த்துகின்றோம் செபிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இறை இரக்க பக்தியின் பின்னால்

இயேசு தூய பவுஸ்தினாக்கு கூறிய வார்த்தைகளில் ஒன்று :
**"நீ எனது வருகைக்காக இந்த உலகத்தை ஆயத்தம் செய்" (1.178)**

ஒரு சிறிய பொறியாக ஆரம்பித்த இந்த இறை இரக்கப் பக்தி முயற்சி இன்று கத்தோலிக்த் திருச்சபையில் ஒருபெரும் விருட்சமாக வளர்ந்து பலருக்கு அருளும், ஆசீர்வாதமும் தருகின்றது.

**"என் அளவிட முடியாத இறை இரக்கத்தை முழு உலகிற்கும் அறிவியுங்கள். என் இரக்கத்தை அறிவிக்கும் பணியில் ஏற்படும் இடர்களால் தளர்ந்து போக வேண்டாம். உங்களைத் தாக்கும் மிகவும் வேதனையான இவ்விடர்கள் இது என் செயலே என்பதற்குச் சாட்சிகளாகும்"** என்று இயேசு கூறினார்

1993 ஏப்ரல் 21ம் திகதி மறைந்த முன்னாள் திருத்தந்தை தூய இரண்டாம் ஜோன்போல் அருட்சகோதரி பவுஸ்ரினாவை முத்திப்பேறுபெற்றவராக அறிவித்த போது ***"இறை இரக்கத்தின் தூதர்களாக திகழுங்கள்"*** என்பதே திருத்தந்தையின் மையக் கருத்தாகவும் வேண்டுகோளாகவும் அமைந்திருந்தது.

25 ஓகஸ்ட் 1905ல் போலந்து நாட்டிலே குளோகோவிஸ் எனும் இடத்தில் பிறந்தவர்தான் ஹெலோனா கொவால்ஸ்கா. பின் நாட்களில் பவுஸ்ரினா கொவால்ஸ்கா மிகவும் ஏழைகளாக இருந்தாலும் அவரது பெற்றோர் அவரை இறை அன்பிலும் பிறரன்பிலும் வளரக் கற்பித்தனர். தன் இருபதாவது வயதில் இரக்கத்தின் அன்னையின் சபையில் ஒரு கன்னியாஸ்திரியாக அவர் இணைந்து கொண்டார். எளிமையான,கடின உழைப்புள்ள அவர் பதின்மூன்று வருடங்களே அதன் பின் உயிர் வாழ்ந்தார். 05. ஒக்டோபர் 1938ல் அவர் இறைவனடி சேர்நதார். **லகியேவ்னிகி** எனும் **கிரேக்கோவ்** நகரிலுள்ள கன்னியர்மடக் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார்.



25. நவம்பர் 1966ல் அவரது புனிதர்பட்ட ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட போது அவரது உடலின் பகுதிகள் தோண்டி எடுக்கப்பட்டு அவர்களது சிற்றாலயத்துக்கு (Chaple) மாற்றப்பட்டன. இன்றும் இவ் உடற் பகுதிகள் அவ்வாலயத்தில் இறைஇரக்கத் திருவுருவப்படத்தின் கீழ் ஒரு பேழையில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றன.


22. பெப்ரவரி. 1931 இல் நடந்ததை அவர் இவ்வாறு விபரிக்கிறார். "வெள்ளை ஆடை அணிந்தவராய் தோன்றிய இயேசுவை நான் கண்டேன். ஆசீர்வாதத்தின் அடையாளமாக ஒரு கையைத் தூக்கியவராகவும், தன் அடுத்த கையால் தனது நெஞ்சைத் தொட்டபடியும் அவர் இருந்தார்.அந்த இடத்திலே உடையின் கீழேயிருந்து வெள்ளை நிறத்திலும், சிவப்பு நிறத்திலுமாக இரண்டு ஒளிக் கற்றைகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன".


அப்போது இயேசு அவரிடம் ***"இதே போன்று ஒரு உருவப்படத்தை வரையுங்கள். அதன் கீழே*** **'இயேசுவே, உம்மை நான் நம்புகிறேன்' என்ற வாக்கியத்தை எழுதுங்கள். இப்படம் முதலில் உங்கள் சிற்றாலயத்திலும், பின்பு முழு உலகத்திலும் ஆராதிக்கப்பட வேண்டும் என ஆசிக்கின்றேன்.** என்று கூறினார்.

அன்று ஒரு சிறு பொறியாக ஆரம்பமான இந்த ஆசீர்வாதம் இன்று முழு உலகிலும் இயேசுவின் அளவற்ற இரக்கத்தைப் பறைசாற்றிக் கொண்டு இருக்கிறது. இப்பக்தி முயற்சியின் பின்னால் இருந்த இருவரை நாம் மறக்கக் கூடாது. ஒருவர் இதன் ஆரம்பமும், வழிகாட்டியுமான அருட்சகோதரி பவுஸ்ரினா கொவால்ஸ்கா இவர் முத்தி பேறு பெற்றவராகத் திருச்சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். மற்றையவர் இப் பக்தி முயற்சி உலகம் எங்கும் பரவ உழைத்தவரான முன்னாள் திருத்தந்தை இரண்டாம் ஜோன்போல் . இவர் இன்று புனிதராகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார்.

இன்றும் இயேசு தனது இரக்கத்தையும், ஆசீரையும் இறைஇரக்கப் பக்தியினூடாக வழங்கிக் கொண்டு இருக்கிறார். வாருங்கள், அவரது அளவற்ற இரக்கத்தின் முன் எம் பாவங்களைக் கழுவி மீண்டும் அவரது சொந்த மக்களாக, புனித இறை கூட்டமாக மாறுவோம்.

## தூய மரியாள் பேராலயத்தில் தவக்கால சிந்தனையுடன் கூடிய துதிப்பலி







## தூய மரியாள் பேராலய மறை ஆசிரியர்களுக்கான தவக்கால தியானம்





## குட்டிக் கதை

Fr.NC

ஒருவர் முகச்சவரம் செய்து கொண்டிருக்கிறார். அவரது சேட் பொக்கற்றில் பென் ஒன்று இருக்கிறது. அருகிலே நின்றவர் அவரிடம் பேனையைக் கொஞ்சம் எடுக்கட்டா என்று கேட்டார் "சேவ்" எடுத்துக் கொண்டிருந்தவர் சொன்னார் **"தாளாரமாய் எடும்"** என்றார். பேனையை எடுத்தவர் சொன்னார் தாளாரம் என்றால் அது பிழை **"தாராளம்"** என்று சொல்லும் என்றார். அதற்கு "சேவ்" எடுத்துக் கொண்டிருந்தவர் சொன்னார் இப்படியான பிழைகள் "ஏளாரம்" விடுவேன் என்றார். பிழை விளங்கி விட்டதா.

## நுழைவாயில் புத்தக வெளியீடு
## க.பொ.த உயர்தர கிறீஸ்தவ நாகரீகம் மாதிரி பரீட்சை வழிகாட்டி









19.03.2015 அன்று தி/ தூயசூசையப்பர் கல்லூரியின் College Day யில் வெளியிடப்பட்டது.
இப் புத்தகத்தை தி/தூய சூசையப்பர் கல்லூரியின் ஆசிரியரும் பாலையூற்று தூய லூர்த்து அன்னை திருத்தலத்தின் மறையாசிரியரும் ஆவார். இவருக்கு எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.


## "நுழைவாயில்" மாதிரி பரீட்சை வழிகாட்டி புத்தகம் விற்பனைக்குண்டு

**"நுழைவாயில்"** மாதிரி பரீட்சை வழிகாட்டி புத்தகம் திருமறைக்கல்வி நிலைய அருளகக் கடையில் விற்பனைக்கு உள்ளது. தேவையானவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா 550.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 08
## தூய யோவான் நற்செய்தி
## அதிகாரம் 01 - 04

**அன்பார்ந்த வாசகர்களே**

“விடுபட்ட எழுத்துப்புதிர்” போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும். 1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு 200/=, அனுப்ப வேண்டிய முகவரி :

**விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 08. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**

**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 30. 04. 2015**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ■ | கா | ■ | நா | | | | | |
| | | | ■ | ம | | | | | ■ |
| | | | ந | | | | | | ■ |
| கூ | | | ■ | | | நே | | | ஏ |
| | | | மூ | கு | | | | | க |
| | | ■ | | | பி | | | | |
| | இ | ■ | | | ■ | யோ | | | ■ |
| | ■ | ■ | | | | | | | ஆ |
| ■ | ச | | | | | | | ■ | ■ |
| வா | | | ம | | | | ஆ | | |

1. வா.......கு ம.........தர் ஆ.......ர் 2. ஆ......டுக் கு.......டி
3. நா.......பத்தா........ 4. ம.........ணு........கு 5. அ.......பு
கூ.........ந்தா....... 6. ச.......ரி........ப் பெ.......
7. ந......தனி........ல் 8. இ.......க்கு மு.......
9. கா.......ச்ச..... 10. எ.......து நே.......ம் 11. மூ.....று
கு......ம் 12. க.....வுளி...... பி........ளைக.......
13. யோ.......ன்

பெயர் ..........................................................

முகவரி ........................................................

பங்கு ...........................................................

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 06
## தூய மத்தேயு நற்செய்தி 21 - 25
## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | ■ | பா | ல | க | ரி | ன் | ■ | அ | ம் |
| ழி | ல் | யி | ளி | வெ | ன் | வா | ■ | னை | ளு |
| ப் | ■ | பெ | ற | வு | ம் | து | ட | வ | க |
| பா | ■ | ■ | இ | லை | ■ | ந் | ட் | ரி | ங் |
| யி | க் | ப | ர | ழ | நே | ரு | கா | ன் | க |
| ரு | யை | ஞ் | த் | ம | ர் | வி | ■ | நி | க் |
| ங் | றி | ச | த | ன் | மை | ண | கோ | லை | டு |
| க | நெ | மு | ப் | வா | யா | ம | ள் | வா | ந |
| ள் | தி | ம் | ப | யோ | ள | ரு | க | ழ் | ல |
| ■ | நீ | ■ | ழி | ■ | ர் | தி | ள் | வு | நி |

1. யோவான் நீதிநெறியைக் காட்ட
2. பாலகரின் மழலை 3. திருமண விருந்து
4. பஞ்சமும் நிலநடுக்கங்களும்
5. விழிப்பாயிருங்கள் 6. நிலைவாழ்வு பெறவும்
7. நேர்மையாளர் அனைவரின் இரத்தப்பழி
8. வான்வெளியில் கோள்கள்

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும்,நன்றிகளும்.**

விடைகள் அனுப்பியோர் - 61

சரியானவிடை எழுதியவர்கள் - 43

பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
செல்வி. டி.இவாஞ்சலின்,
104 , கண்ணகிபுரம்,
உவர்மலை.

**3ம் பரிசு 200/=**
செல்வி. அப்சரா நிவேதி,
நிலாவெளி.

**2ம் பரிசு 300/=**
செல்வி. எம். தர்சிகா,
27,பேராலய வீதி,
திருகோணமலை.

➤ பாராட்டுக்குரியவர்களின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியாகும்

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 15
## இணைச்சட்டம் 01 ~ 12 வரையான அதிகாரங்கள்

01. யார் மாபெரும் அடையாளங்களையும் அச்சுறுத்தும் அரும் செயல்களையும் செய்தார்?

விடை..........................................................

02. எதைப் போல் உங்களைத் துரத்தி அடித்தனர்?

விடை..........................................................

03. எங்கு நீங்கள் ஆண்டவரை கடும் சினத்துக்கு உள்ளாக்கினீர்கள்?

விடை..........................................................

04. சீதோனியர் யாரை சிரியோன் என்றழைக்கின்றனர்?

விடை..........................................................

05. கடவுளாகிய ஆண்டவர் உங்களை எந்த நாட்டுக்கு அழைத்துச் செல்கிறார்?

விடை..........................................................

06. ஏமியர் யாரைப் போன்று வலிமை மிக்கவர்கள்?

விடை..........................................................

07. உங்களுக்கு எதிரான சான்றுகளாக எதை ஏற்படுத்துவோர் என்று ஆண்டவர் கூறுகிறார்?

விடை..........................................................

08. ஆண்டவர் எங்கே நம்மோடு ஓர் உடன் படிக்கை செய்து கொண்டார்?

விடை..........................................................

09. நீங்கள் அறியாத வேற்று தெய்வங்களை பின்பற்றினால் என்ன உண்டாகும் ?

விடை..........................................................

10. எந்த இடமெல்லாம் உங்கள் எரிபலிகளைச் செலுத்தாதபடி கவனமாய் இருங்கள் என்று கூறினார்?

விடை..........................................................

பெயர் ..........................................................

முகவரி ........................................................

பங்கு ...........................................................

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி எண்~13
## எண்ணிக்கை நூல் 13 ~ 24 இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01. | விடுதலையளிப்பவர் | ( 13:16 ) |
| 02. | 14700 | ( 16:49 ) |
| 03. | லேவியரின் கோல்மேல் | ( 17:03 ) |
| 04. | எலயாசர் | ( 16:39 ) |
| 05. | காலேபு, யோசுவா | ( 14:30 ) |
| 06. | செங்கிடாரியின், ஏழு | ( 19:04 ) |
| 07. | சீகோன் நகர் | ( 21:28 ) |
| 08. | பாலாக்கு | ( 22:07 ) |
| 09. | பிலயாம், கேனியனை | ( 24:21 ) |
| 10. | பெகோர் | ( 24:03 ) |

பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும். பங்குபற்றியவர்கள் - 40 பேர்

சரியான விடையளித்தோர் - 20 பேர்

**பரிசுக்குரியவர்கள்**

**1ம் பரிசு 500/=**
செல்வன் த.அதீஷன் பேனாட்
6ம் வட்டாரம், சாம்பல்தீவு
திருகோணமலை

**2ம் பரிசு 300/=**
செல்வன் G.கிஷோன்
இல: 221 தூய ஹர்து அன்னை
ஆலய வீதி, பாலையூற்று



**3ம் பரிசு 200/=**
செல்வி D. இவேஞ்சலின்
இல : 10/4 கண்ணகி புரம்,
உவர்மலை, திருகோணமலை



பாராட்டுக்குரியவர்கள்

01. செல்வன். பீ. கிரிசாளன். சாம்பல்தீவு
02. செல்வன். ஜி. டிலுசன். பாலையூற்று
03. செல்வி. எ.வேர்ஜினியா. அன்புவழிபுரம்
04. செல்வி. த. அபிஷா. சாம்பல்தீவு
05. செல்வி. லொ. றன்சியா.ஜொ. சாம்பல்தீவு
06. செல்வன். ஜே.ஜெரோம். அன்புவழிபுரம்
07. செல்வன். ஜே. ஜதுஷன். சாம்பல்தீவு
08. செல்வன்.K.M. இஸ்டிவன்விராஜ் சாம்பல்தீவு
09. செல்வி. டிலின் றொஷேல்.அ. சாம்பல்தீவு
10. செல்வி. R.சுபாஷினி. நிலாவெளி
11. செல்வன்D. சனோஜ் அன்டனி. உவர்மலை
12. செல்வி அ. டிவொன்ஷா. பாலையூற்று
13. செல்வன் அ. டேர்வின். அன்புவழிபுரம்
14. செல்வி அ. றொக்சியாவாத்லட். சாம்பல்தீவு
15. செல்வி எப். ரிட்சியா. பேராலயம்
16. செல்வன் சைமன்ட்யூட். ஜெ செல்வநாயகபுரம்
17. செல்வன் த. அனோஷன்பேட்ரம். சாம்பல்தீவு

**குறிப்பு:** இரண்டு போட்டிக்குரிய பரிசுக்குரியவர்களின் பரிசுத் தொகையை அவர்களது பங்குத் தந்தையிடம் பெற்றுக் கொள்ளலாம்.

அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 30. 04. 2015

## மறைக்கல்வி கற்போம் ~ 07

01. தூய மாற்கு நற்செய்தியாளர் விழா எப்போது?
சித்திரை 25

02. தூய மாற்கின் சின்னம்?
சிங்கம்

03. மறை வல்லுனர் பட்டம் பெற்ற புனிதைகள் மூவர் யார்?
தூய அவிலாதிரேசாள்
தூய குழந்தைதிரேசாள்
தூய சியென்னாகத்தரீனா

04. தூய ஜான் பாப்டிஸ் தெலேசால் எந்த திருத்தந்தையால் புனிதரான பட்டம் பெற்றார்?
திருத்தந்தை 13ம் சிங்கராயர்
சித்திரை 07ம் திகதி

05. தூய ஜான் பாப்டிஸ் தெலேசால்லை பள்ளி ஆசிரியர்களின் பாது காவலர் என அறிவித்த திருத்தந்தை யார்? எத்தனையாம் ஆண்டு?
திருத்தந்தை 13ம் சிங்கராயர்
1900ம் ஆண்டு

06. பாஸ்கு காலம் என்றால் என்ன?
உயிர்த்த இயேசுவில் மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்தும் காலம் (உயிர்ப்பு ஞாயிறிலிருந்து பரிசுத்த ஆவியானவர் பெருவிழா வரையிலான 50 நாட்கள்)

06. பாஸ்கா காலத்தின் முக்கிய அம்சங்கள்?
ஒளி, உப்பு, நீர்

07. பொதுக்காலம் என்றால் என்ன?
புனிதர்களின் திருநாட்களையும் மற்றைய சாதாரண வார நாட்களையும் சிறப்பிக்கும் காலம்

08. நற்கருணை பேழையின் முன் விளக்கு எரிவதன் அடையாளம் என்ன?
இயேசுவின் உயிர்தரும் பிரசன்னத்தை உணர்த்தவும் நமது வணக்கத்தின் அடையாளமாகவும் விளங்குகிறது.

09. தவக்காலத்தில் முக்கியம் பெறும் அம்சங்கள்?
விபூதி, குருவானவரின் திருப்பலி ஆடை (ஊதா), சிலுவைப்பாதை தியானம், கால் கழுவும் சடங்கு, நற்கருணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியும் வரவேற்பும்




இவர்களது
பணிவாழ்விற்காக
செபிக்கின்றோம்
வாழ்த்துகின்றோம்
நன்றி
கூறுகின்றோம்



## உவர்மலை குழந்தை இயேசு ஆலய 29வது வருடாந்த திருவிழா



## செல்வநாயகபுரம் தூய வனத்து அந்தோனியார் ஆலயப்பங்கின் பணிமனைத் திறப்பு விழா



## மறையாசிரியர் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காலத் தியானம் - 2015

28.03.2015 அன்று தூய யாகப்பர் ஆலயம் வெல்வெரியில் தமிழ் சிங்கள மறையாசிரியர்கள் கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான தவக்காத்தியானம் நடைபெற்றது. தமிழ் பிரிவிற்கு தி/தூய சூசையப்பர் கல்லூரியின் அதிபர் அருட்பணி எஸ்.ஏ. பொன்சியன் அ.ம.தி அவர்களும் சகோதர மொழி பிரிவிற்கு டோமினிக்கன் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி சிராணி அவர்களும் வளவாளர் களாவர் "ஆசிரியரின் கடமைகள் பொறுப்புக்கள்" என்ற கருப்பொரு ளில் தியானிக்கப்பட்டது.


தமிழ் சிங்கள மறையாசிரியர்கள், கத்தோலிக்க ஆசிரியர்கள் உட்பட 80 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நற்கருணை ஆசீ ருடன் இனிதே நிறைவு பெற்றது.



## அர்ப்பண வாழ்வின் ஆண்டில் மாபெரும் தவக்கால ஆராதனை




## தூய மரியாள் பேராலய கத்தோலிக்க இளைஞர்களுக்கான தவக்கால தியானம்



## பணி பொறுப்பேற்பு



கடந்த ஒருவருட காலமாக குச்சவெளி துய செபமாலை அன்னை ஆலயமும் (சலப்பையாறு, புடவைக்கட்டு, புல்மோட்டை, கல்லறாவ) ஆகிய ஆலயங்களில் தற்காலிகமாக பணியாற்றிய பங்குத்தந்தை அருட்பணி சீ.றோ.ஜெயரெத்தினம் அவர்கள் 2015 மார்ச் 11ம் திகதி முதல் திருமறைக் கல்வி நடுநிலையத்தில் சிங்கள பிரிவிற்கு பொறுப்பாளராக ஆயர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பணிவாழ்வு சிறக்க வரவேற்கின்றோம்,வாழ்த்துகின்றோம், செபிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.

*"ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு"* (தி.பா 27:1)